**மாநில திட்ட இயக்ககம், சென்னை-06**

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

| **அனுப்புநர்** | **பெறுநர்** |
|---|---|
| மாநில திட்ட இயக்குநர்,<br>மாநில திட்ட இயக்ககம்,<br>ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,<br>டி.பி.ஐ. வளாகம்,<br>சென்னை – 06. | முதன்மைக் கல்வி அலுவலர்,<br>அனைத்து மாவட்டங்கள். |

**ந.க.எண்.449/C7/ஒபக/பமேகு/நாள்.21.06.2022**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு - வழிகாட்டுதல்கள் -சார்பு.

பார்வை
1. இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண்.449 /C7 /ஒபக / பமேகு/2021 நாள்.16.03.2022, 31.03.2022 மற்றும் 06.04.2022
2. இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண்.449/C7/ ஒபக / பமேகு / 2021 நாள். 20.06.2022 .

*****

பார்வை-1ல் காணும் செயல்முறைகளின் படி, பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு அனைத்து தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் நடைப்பெற்றது. இதன் தொடர்ச்சியாக பார்வை-2ல் காணும் செயல்முறைகளின்படி, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் **09.07.2022** அன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தலைமையாசிரியர்களுக்கு முதன்மைக் கல்வி அலுவலர்கள் தலைமையில், பள்ளிமேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு சார்ந்த கூட்டம் பார்வையில் காணும் செயல்முறைகளில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றி ஜூலை 4ம் தேதிக்குள் விளக்கக்கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

இதனைத் தொடந்து அனைத்து தலைமையாசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பிற்கு கீழ்காணும் வழிமுறைகளை பின்பற்று மாறு அறிவுறுத்தப்படுகிறது.

**பெற்றோர்களுக்கு மறுகட்டமைப்பு குறித்த தகவல் தெரிவித்தல்:**

மாநில மற்றும் மாவட்டக் கருத்தாளர்கள் மூலம் பயிற்சிப் பெற்ற ஆசிரியர் பயிற்றுநர் மூலமாக உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் பெற்றோர்களுக்கு பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு குறித்து விளக்கமும் மறுகட்டமைப்பு நாளில் பள்ளிக்கு வருகை புரிவது மற்றும் மறுகட்டமைப்பில் பங்கு பெறுவதன் அவசியம் விளக்கமாக தொடக்க நிலை மறுகட்டமைப்பிற்கு தெரிவித்ததைப் போல எடுத்துரைக்கபட வேண்டும்.

i. மறுகட்டமைப்பு நடத்துவதற்கு முன்பு ஜுலை 7-ம் தேதிக்குள் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாநில மற்றும் மாவட்டக்கருத்தாளர்கள் மற்றும் ஆசிரியர்பயிற்றுநர் மூலமாக பெற்றோர்களுக்கு பள்ளிமேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு, அதன் செயல்பாடுகள், உறுப்பினர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் குறித்து விளக்கக்கூட்டம் நடத்தவேண்டும்.

ii. பள்ளிமேலாண்மைக்குழு விளக்கக் கூட்டம் மற்றும் மறுகட்டமைப்பு தொடர்பான அழைப்புக் கடிதத்தைத் தயார் செய்து பெற்றோர்களுக்கு அனுப்ப வேண்டும். பெற்றோர்களின் கையொப்பம் அழைப்புக் கடிதத்தில் பெற்று அவர்களின் பங்களிப்பை உறுதி செய்ய வேண்டும்.

iii. மறுகட்டமைப்பு நாளன்று இந்த அழைப்புக் கடிதங்களை சேகரித்து வைக்க வேண்டும். பெற்றோருக்கான அழைப்பிதழ் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் பள்ளியில் படிக்கின்ற மாணவர்கள் மூலம் கொடுத்து அனுப்பலாம்.

iv. பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு குறித்த தகவல்களை மக்கள் அதிகம் பார்க்கும் முக்கிய இடங்களில் (எ.கா.)ரேஷன்கடைகள், ஊராட்சி மன்ற அலுவலகம் /

நகராட்சி அலுவலகம்/ சமுதாயக்கூடம் / மின்கட்டணம் செலுத்தும் மின்வாரிய அலுவலகம் ஆகிய இடங்களில் பார்வையில் படும்படியாக வைக்கலாம்.

v. பள்ளி மேலாண்மைக்குழு விளக்கக்கூட்டம் மற்றும் மறுகட்டமைப்பு தொடர்பான அழைப்புச் செய்தியை வாட்ஸ் அப்செய்திகள் மூலம் பெற்றோர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

vi. மக்கள் கூடுகின்ற முக்கிய இடங்களில் பள்ளி மேலாண்மைக்குழு குறித்த விழிப்புணர்வு பதாகைகள் (பேனர்) வைக்கலாம்.

vii. பல்வேறு சமூக வலைத்தளங்கள் வாயிலாக பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு குறித்த சிறு காணொலிகள் மாநில திட்ட இயக்ககத்தால் பகிரப்படும். செய்திதாள் மூலமாகவும் மறுகட்டமைப்பு தொடர்பான கட்டுரைகள் வெளிவரும். இவைகளை தலைமையாசிரியர்களின் Whatsapp குழுக்களில் முதன்மைக் கல்வி அலுவலர்கள் பகிர கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்தகைய நிகழ்வுகளின் மூலம் பள்ளி மேலாண்மைகுழு மறுகட்டமைப்பிற்கு பெற்றோர்கள் அதிக எண்ணிக்கையில் வருகை புரிவதையும் மற்றும் அவர்களின் பங்களிப்பையும் உறுதி செய்தல் வேண்டும்.

viii. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மறுகட்டமைப்பில் பங்கேற்கும் பெற்றோர்களின் எண்ணிக்கையினை 09.07.2022 தேதியில் EMIS இணைய தளத்தில் தவறாது பதிவு செய்யுமாறு தலைமையாசிரியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ix. மறுகட்டமைப்பு நிறைவடைந்தப் பின் புதிய உறுப்பினர்களின் விவரங்களை EMIS-ல் 16.07.2022-க்குள் தவறாது பதிவேற்றம் செய்ய அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தலைமையாசிரியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

x. மறுகட்டமைப்பு நாளன்று மேற்கொள்ளப்படும் செலவினம் ஏற்கெனவே பெற்றோர்கள் கூட்ட செலவினத்தோடு மாவட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

xi. மாவட்ட களஅலுவலர்கள் (ADPC/APO/EDC/DC/MDO/BRTE) ஒருங்கிணைந்து நடத்தி பள்ளிகளை பார்வையிட்டு புகைப்படுத்துடன் கூடிய தொகுப்பறிக்கையை

இவ்வியக்ககத்திற்கு அனுப்புமாறு அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளகள்/முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

xii. மேற்காண் வழிமுறைகளைப் பின்பற்றி அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மறுகட்டமைப்பு நிகழ்வினை எவ்வித புகாருக்கும் இடமளிக்கா வண்ணம் நடத்திடுமாறு மாவட்டத் திட்ட கள அலுவலர்களுக்கு (ADPC / APO/ EDC/ DC /MDO / BRTE) அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளகள்/ முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு

பார்வையில் காணும் செயல்முறைகள்

மாநில திட்ட இயக்குநர்